# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2452/42 - 2025 සැප්තැම්බර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.09.04**

2452/42 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை


(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MUL/LND/02/ACQ/70.
காணி அமைச்சின் தொடர் இல.: 4-3/15/2014/VE/ 281.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 276/A, பரபாமுல்ல மேற்கு கிராம அலுவலர் பிரிவிற்குச் சொந்தமான பரபாமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.03.25 ஆந் திகதிய மற்றும் கடஸ்திரல் வரைபட 90 ஆம் இலக்கத்தில் மேலதிக இல. 39, பத்திர இல. 49 இல் காணித்துண்டு இலக்கம் 1236 எனக் காட்டப்பட்டுள்ள முழுக் காணியில் 0.0045 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் குறிப்பிடப்படும் காணியின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 1236**

காணியின் பெயர்: குடகல்கெட்டியெமாகெதர வத்த, குடகல்கெட்டியெவத்த, மஹயாயெஹேன; விபரம்: வீட்டுத்தோட்டம், கிணறு மற்றும் நிலையான ஒரு கட்டிடத்தின் பகுதி காணப்படுகிறது; உரிமை கோருபவர்: டீ. எஸ். தஸநாயக்க பியசெவன, குடகல் கெட்டியெவத்த, பரபாமுல்ல மேற்கு; விஸ்தீரணம்: 0.0045 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி மு.ப.




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

10.00 மணிக்கு முலட்டியன பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விந்தியா டீ. சமரக்கொடி,
பிரதேச செயலாளர்,
முலட்டியன.

பிரதேச செயலகம்,
முலட்டியன,
2025, ஓகத்து 29.

EOG 09 - 0050